கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி...

முதல் பக்கத் தொடர்ச்சி

அடிப்படையில் அனைவரும் மனிதர்களாக செயல்பட வேண்டும். இது போன்று நடந்த சம்பவத்தில் யார் மீது தவறு இருக்கிறது என்பது விசாரணையில்நிச்சயம்நிரூபிக்கப்படும். முதலமைச்சர் தெளிவாக தெரிவித்து இருக்கிறார் யார் மீது தவறு இருந்தாலும் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் ப்ளே கேம் என்பதை ஆரம்பிப்பது தேவையில்லாத ஒன்று தவறான ஒன்று. எப்படிப்பட்ட ஒரு சூழலாக இருந்தாலும் மனிதர்களோடு மனிதர்களுக்காக நாம் இருக்க வேண்டும்.

இதுவரை நான் பார்த்திராத ஒன்று!

தமிழக வெற்றி கழக தலைவர் கரூரில் நடந்த பிரச்சினைக்கு பிறகு ஒரு ஆறுதல் கூட சொல்லாமல் அந்த இடத்திலிருந்து புறப்படுவதோ தன்னுடைய பாதுகாப்பை மட்டும் நினைப்பதோ என்னை பொருத்தவரை நான் இதுவரை பார்த்திராத ஒன்று. அதையும் தாண்டி அவர்களால் இருக்க முடியவில்லை என்றால் கட்சியின் அடுத்த கட்ட தலைவர்கள் கூட உதவி செய்யாத ஒரு சூழ்நிலை பார்க்கும்போது மனிதாபிமானம் இல்லை என தான் தெரிகிறது . மற்ற கட்சித் தலைவர்கள் அனைவரையும் பார்க்க முடிந்தது அனைவரும் அங்கு வந்து ஆறுதல் தெரிவித்தார்கள்.

த.வெ.க. தலைவர் கரூர் விவகாரம் தொடர்பாக 4 மணி நேரத்திற்கு பிறகு 'எக்ஸ்' தளத்தில் பதிவிடுகிறார். ஆதவ் அர்ஜுனன் எக்ஸ் தளத்தில் பதிவிட்டு விட்டு அதை டெலிட் செய்து இருக்கிறார்.

வன்முறையை தூண்டுவது போல் பேசுவதா?

மக்களைப் பற்றி அவர்களின் பாதுகாப்பை பற்றியும் அவர்களுக்கு ஆறுதலாக இருப்பதை பற்றி தான் யோசிக்க வேண்டும் இன்னும் பிரச்சினையை தூண்டுவது போல, வன்முறையை தூண்டுவது போல் பேசுவது நிச்சயமாக உச்சகட்ட பொறுப்பின்மை.

ஒரு பிரச்சினையை அமைதியாக்குவது தான் எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும் கடமை. வேறு எந்த இடத்திலும் வன்முறையை தூண்டக்கூடிய விதத்தில் உயிர் சேதமோ அல்லது வன்முறையை தூண்டுவதோ வேறு பேச்சுக்களை தவிர்க்க வேண்டும். அரசியல் ஆதாயம் தேடுகிறார்கள் என்று தான் நினைக்க முடியும்.

கரூர் விவகாரம் தொடர்பாக ஒரு தனிநபர் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது அவர்கள் விசாரணையை மறுநாளே தொடங்கி இருக்கிறார்கள். அதைத் தாண்டி எப்படிப்பட்ட விசாரணைகள் வேண்டும் என அவர்கள் நினைக்கிறார்கள் என்று எனக்கு தெரியவில்லை.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டியளித்தார்.

தி.மு.க. இளைஞர் அணி

முத்தமிழறிஞர் பதிப்பகம்

அரிய புகைப்படங்களை அனுப்புங்கள்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 75-ஆம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, பல்வேறு அரசியல் இயக்கத் தலைவர்கள், எழுத்தாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் எழுதும் கட்டுரைகள் அடங்கிய புத்தகம் ஒரு மகத்தான வரலாற்று ஆவணமாய், கழக இளைஞர் அணியின் சார்பில், நடத்தப்படும் முத்தமிழறிஞர் பதிப்பகம் வெளியீடாக வெளிவரவிருக்கிறது.

கழக இளைஞர் அணிச்செயலாளர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள ஆலோசனைக்குழு மற்றும் ஆசிரியர் குழு புத்தக உருவாக்கப்பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள். கழக மாநாடுகள், பேரணிகள், பொதுக்கூட்டங்கள், போராட்டங்கள், தி.மு.கழக இதழ்கள், வரலாற்றுச் சிறப்புவாய்ந்த அறிவிப்புகள், துண்டறிக்கைகள், சுவரொட்டிகள், சுவர் விளம்பரங்கள் தொடர்பான அரிய புகைப்படங்கள் உங்களிடம் இருந்தால், அவற்றை

தி.மு.க. 75 – அரிய புகைப்படங்கள்,
அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை,
சென்னை - 600 018.

என்ற முகவரிக்கு அனுப்பவும். muthamilarignar@gmail.com என்ற மின்னஞ்சலுக்கோ அல்லது 8807193390 என்ற வாட்ஸ்அப் எண்ணுக்கோ அனுப்பலாம்.

கலைஞர் 100 1924 - 2023

என்.கௌதமன் பங்கேற்பு!

தமிழ்நாட்டில் 414 வட்டாரங்களில் 500 வெற்றிப் பள்ளிகள் திட்டம்!

அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்!

நாகை, அக்.1-

நாகை மாவட்டம் நாகை நகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளியில் வெற்றிப் பள்ளிகள் (VETRI [VIBRANT EDUCATION TARGETING REPUTED INSTITUTIONS] PALLIGAL) திட்டத்தினை பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டு முதலமைச்சரின் சீரிய தலைமை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அரசுப் பள்ளி மாணவர்களுக்கு தரமாக கல்வியை உயர்கல்விக்காளப் பயிற்சியும் வழங்குவதில் கொண்டுள்ள அக்கறையும், அர்ப்பணிப்பையும் காட்டுகிறது. சட்ட மன்றத்தில் நிதியமைச்சர் தமிழ்நாடெங்கும் உள்ள 414 வட்டாரங்களில் 500 வெற்றிப் பள்ளிகள் நிறுவப்பட்டும் அறிவித்ததைத் தொடர்ந்து 29.07.2025 அன்று வெற்றிப் பள்ளிகளுக்கான அரசாணை வெளியிடப்பட்டது

அதனடிப்படையில் தமிழ்நாடு அரசுப் பள்ளி மாணவர்கள், இந்தியா மட்டுமல்ல உலகின் தலை சிறந்த கல்வி நிறுவனங்களில் உயர் படிப்பை தொடர்வதற்கு, அவர்கள் திறனை மேம்படுத்தும் நோக்கில் மாநிலத்தின் 38 மாவட்டங்களின் ஒவ்வொரு வட்டாரத்திலும் வெற்றிப் பள்ளிகள் திட்டம் (VETRI [VIBRANT EDUCATION TARGETING REPUTED INSTITUTIONS) PALLIGAL) கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி நாகையில் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ப. ஆகாஷ், நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக தலைவர் என்.கௌதமன், கீழ் வேளூர் சட்டமன்ற உறுப்பினர் நாகை மாலி, நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், மாதிரிப் பள்ளிகளின் உறுப்பினர் செயலர் இரா. சுதன், பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் ச.கண்ணப்பன் மற்றும் கல்வித்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

நாகை மாவட்டம் நாகை நகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளியில் வெற்றிப் பள்ளிகள் திட்டத்தினை பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்து பேசுகையில்,

உயர்கல்வி நிறுவனங்களில் நம் மாணவர்கள் சேர்வதற்காக முதல் கட்டமாக மாவட்டம் தோறும் மாதிரி பள்ளிகள் தொடங்கப்பட்டன. அதன் தொடரச்சியாக வட்டாரம் தேறும் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன.

அதன்படி ஒவ்வொரு வட்டாரத்தில ஒரு அரசு மேல்நிலைப்பள்ளி வெற்றிப் பள்ளியாக செயல்படும் அதில் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வார இறுதியில் பயிற்சிகள் வழங்கப்படும். கல்லூரி பேராசிரியர்கள் உள்ளிட்ட பாட நிபுணர்கள் இப்பயிற்சியினை வழங்குவார்கள். இப்பயிற்சி வருப்புகளுக்கு மாதிரி பள்ளிகள் மூலம் பயிற்சித் தாள்கள், பாடங்களை விளக்கும் காணொளிகள், இணைய வழியில் பயிற்சித் தேர்வுகள் ஆகியவை வழங்கப்படும்.

ஒவ்வொரு பள்ளியிலும் பாடங்களைத் திரும்பட வழங்குவதற்கென ஸ்மார்ட் போரடுகள் இணைய வசதி ஆகியயை நிறுவப்படும். வெற்றிப் பள்ளிகள் மூலம் கிராமப் புறர் மாணவர்கள் நன்கு திட்டமிட்டு கட்டமைக்கப்பட்ட பயிற்சியைத் தங்கள் வட்டாரத்திலேயே பெறும் வாய்ப்பும், மாணவர்கள JEE, NEET, CUET, CLAT தயாராளும் வாய்ப்பும் கிடைக்கிறது.

இந்த ஆண்டு முதல் கட்டமாக 236 வட்டாரங்களிலுள்ள 309 பள்ளிகள் வெற்றிப் பள்ளிகாகச் செயல்படும் என பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேசினார்.

முன்னதாக நாகப்பட்டினம் நகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளியில் புதிய தொழில்நுட்ப கணினி மையத்தினை அமைச்சர் அன்பின் மகேஸ்வரி திறந்து வைத்து, நகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளியை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, மாணர்களிடம் கலந்துரையாடினார்.

நிகழ்ச்சியில் நாகை நகரக் கழகச் செயலாளரும், நகர்மன்றத் தலைவருமான இரா.மாரிமுத்து நாகை நகர்மன்ற துணைத் தலைவரும், நாகூர் நகர கழக செயலாளருமான எம்.ஆர். செந்தில்குமார், தலைஞாயிறு ஒன்றிய கழக செயலாளர் மகா. குமார், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் ஆர்.ஏ.டி. அண்ணாதுரை, குலோத்துடன், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் எஸ்.எம்.ஏ. கணேசன், நாகை நகர துணைச் செயலாளார் வெற்றிலைக் கடை சிவா, நகர இளைஞரணி எஸ். சௌந்தரராஜன், பயாஸ், நாகை நகரக் கழக நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு களின் உறுப்பினர்கள் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் லதா, தொடக்க கல்வி இயக்குநர் நரேஷ், மற்றும் பள்ளிக் கல்வித் துறை உயர் அதிகாரிகள் தலைமை ஆசிரி யர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தனது அரசியல் பலத்தை காட்ட

விஜய் திட்டமிட்டே பிரச்சாரத்தை தாமதப்படுத்தினார்!

'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் குற்றச்சாட்டு!

சென்னை, அக்.1

தனது அரசியல் பலத்தை காட்ட விஜய் திட்டமிட்டே தனது பிரச்சாரத்தை தாமதப் படுத்தினார் என்று 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

இதுகுறித்து 30.09.2025 தேதிய 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-

தினகரன்

செப்டம்பர் 30, 2025 செவ்வாய்க்கிழமை

தாமதத்தால் வந்த வினை

கரூரில் த.வெக தலைவரும் நடிகருமான விஜய் பிரசாரத்தில் 41 பேர் பலியானது, இந்திய நாட்டையே உலுக்கி உள்ளது. கேரளாவுக்கு அடுத்தபடியாக தமிழ்நாட்டில் தான் படித்தவர்கள் அதிகம் என புள்ளி விவரங்கள் கூறுகின்றன. ஆனால், கேரளாவில் சினிமாவையும், அரசியலையும் மக்கள் பிரித்து பார்க்கிறார்கள். தமிழ்நாட்டில் தான் இது சாபக்கேடாக அமைந்துள்ளது. திரை கவர்ச்சியை மூலதனமாக பயன்படுத்தி மக்களின் அரசியல் உரிமையை சுரண்ட முற்படும் நபர்களை எதிர்க்கவும் அடையாளம் காட்டவும் வேண்டியுள்ளது. அதனால் ரசிகர்கள் பின்னணியில் கால்பதித்தால் தமிழர்களின் உரிமைக்கு அது கேடு விளைவிக்கும்.

இத்தனை உயிர்களை இழப்பதற்கு முக்கிய காரணமாக சொல்லப்படுவது விஜய், பிரசாரத்துக்கு குறித்த நேரத்துக்கு வராமல் மக்கள் கூட்டத்தை அதிகரிக்க செய்த தந்திரம் என பல்வேறு கட்சி தலைவர்கள், அரசியல் விமர்சகர்கள் கூறி வந்தனர். இதையே போலீசார் விசாரணையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வழக்கு தொடர்பாக நேற்று போடப்பட்ட எப்.ஐ.ஆரில் அதிர்ச்சி தக வல்கள் வெளியாகி உள்ளன.

விஜய் தன் அரசியல் பலத்தை காட்ட வேண்டும் என்றே 4 மணி நேரம் தாமதமாக வந்தார். இதனால் அக்கட்சி தொண்டர்கள் மரங்களிலும், கடை கொட்டகைகளிலும் ஏறி அமர்ந்தனர். மரக்கிளை முறிந்ததால் கீழே நின்றவர்கள் மீது விழுந்ததில் பலர் உயிரிழந்ததும், காயமடைந்ததும் காரணமாக அமைந்துவிட்டது. மேலும், அக்கட்சியின் நிர்வாகிகள் புஸ்சி ஆனந்த், நிர்மல்குமார் ஆகியோரிடம் காவல்துறையினர் பல முறை எச்சரித்தும் அவர்கள் கேட்கவில்லை.

பெண்கள், குழந்தைகள் நீண்ட நேரம் காத்திருந்தது, தண்ணீர் வசதி இல்லாதது நிலைமையை இன்னும் மோசமாக்கி விட்டது. காவல்துறையினர் முழு பாதுகாப்பு அளித்துள்ளனர். பாதுகாப்பில் சமரசம் செய்து கொள்ளவில்லை. திட்டமிட்டே விஜய்யின் பிரசாரம் தாமதமாக்கப்பட்டது. தங்கள் அரசியல் பலத்தை காட்ட வேண்டும் என்பதற்காக திட்டமிட்டு பிரச்சாரம் தாமதம் செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. விதிமுறைகள் சரியாக பின்பற்றப்படவில்லை. தொண்டர்களை தமிழக வெற்றிக் கழகத்தின் நிர்வாகிகள் சரியாக ஒழுங்குபடுத்தவில்லை. கூட்ட நெரிசலால் ஏற்பட்ட அழுத்தத்தால் மக்கள் உடல் நிலை சோர்வடைந்தனர். கீழே விழுந்தவர்கள் மிதிபாடுகளில் சிக்கி 11 பேர் உயிரிழந்தனர் என எப்ஐஆரில் கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையில் கரூர் நெரிசலில் 25 பேர் மூச்சுத் திணறி பலியானதாக உடற்கூராய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. உயிரிழந்தவர்கள், கடைசி 2, 3 நிமிடங்களில் மூச்சுவிட முடியாத நிலை ஏற்பட்டதாலேயே 25 பேர் பலியானதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. 10க்கும் மேற்பட்டோருக்கு விலா எலும்புகள் உடைந்து உள்ளுறுப்புகளில் பாதிப்பு ஏற்பட்டு உயிரிழந்ததாக கூறப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவின்பேரில் உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் ஒரு நபர் விசாரணை ஆணையம் கரூரில் நேற்று 2வது நாளாக விசாரணை நடத்தியது. சம்பவ இடத்தில் வைக்கப்பட்டுள்ள சி.சி.டி.வி. கேமராக்களையும் ஆய்வு செய்துள்ளதாக தெரிகிறது. கூட்ட நெரிசல் ஏற்பட்ட இடத்திலும் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. சம்பவ இடத்தில் பொதுமக்களிடம் இந்த விசாரணையை நீதிபதி மேற்கொண்டுள்ளார். ஆணையத்தின் முழு விசாரணை முடிவில் கொடூர சம்பவத்தின் முழு விவரமும் தெரியவரும். இதுபோன்ற துயர சம்பவம் தமிழ்நாட்டில் இனிமேல் நடைபெறாத வண்ணம், பல்வேறு கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி மனித உயிர்களை காக்க வேண்டும் என்பதே அனைத்துத் தரப்பு மக்களின் பெரும் எதிர்பார்ப்பாக உள்ளது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் ஊரணி தாங்கள் ஊராட்சியில் ரூபாய் 17.30 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய பள்ளி வகுப்பறை கட்டிடத்தை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., திறந்து வைத்துபள்ளி மாணவர்களுக்கு புத்தகங்களை வழங்கினார். உடன்செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், மேல்மலையனூர்ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன்,வட்டார கல்வி அலுவலர் மதன்குமார்,மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, உள்ளிட்ட துறைசார்ந்த அலுவலர்கள், தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

அரசு பணிகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு 4 சதவிகித இட ஒதுக்கீடு அரசாணை வெளியீடு!

சென்னை, அக்.11–

தமிழ்நாடு அரசு பணிகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு 4 சதவிகித இடஒதுக்கீடு வழங்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். இந்நிலையில், இந்த அறிவிப்பை செயல்படுத்தும் விதமாக தமிழ்நாடு அரசு நேற்று அரசாணையை வெளியிட்டுள்ளது. அதில், மாற்றுத்திறனாளிகள் பணிபுரிவதற்கான ஏற்ற பதவிகள் குறித்த தகவல் வெளியிடப் பட்டுள்ளது. ஏ,பி,சி,டி என்று நான்கு நிலைகளிலும் 119 பதவிகள் மாற்றத்திறனாளிகளுக்கு ஏற்ற பதவிகள் என்று தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

இயற்கை வளங்கள் துறையில் மேலாளர், துணை மேலாளர், அரசு சட்டக் கல்லூரிகளில் உள்ள நூலகங்களில் நூலகர் பணியிடங்கள், சட்டப்பேரவையில் உதவியாளர் பணியிடங்கள், உணவு மற்றும் நுகர்வோர் பாது காப்புத் துறையில் கிடங்கு மேலாளர், துணை கிடங்கு மேலாளர் மற்றும் உதவியாளர்கள், போக்குவரத்துத்துறையில் நடத்துனர், ஓட்டுநர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையில் சாலை ஆய்வாளர், உணவு பாதுகாப்புத்துறையில் உணவு பாதுகாப்பு அதிகாரி, தமிழ்நாடு எரிசக்தித்துறையில் மருத்துவ அதிகாரி, தட்டச்சர், அலுவலக உதவியாளர் என 119 பதவிகள் மாற்றுத்திறனாளிகள் பணிபுரிவதற்கான ஏற்ற பதவியிடங்கள் என்று அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி, திருக்கோவிலூர் நகரம், 9வது வார்டு தியாகி வடிவேல் நகரில் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட புதிய நியாய விலைக் கட்டிடத்தை கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ பொதுமக்களின் பயன்பாட்டுக்கு திறந்து வைத்தார். உடன் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி, மாவட்ட துணை ஆட்சியர் ஆனந்தகுமார் சிங், டி.என். முருகன், மு.தங்கம், டி.செல்வராஜ், ஆர்.கோபிகிருஷ்ணன், அ.சா.ஏ.பிரபு, உமாமகேஸ்வரி குணா மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.